வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 10.04.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- ஹோமியோபதி மருத்துவம் தனது ஆழமான, சமூகப் பிணைப்பு மற்றும் நீடித்த அணுகு முறைகள் மூலம், வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைவதற்கான பாதையாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்ற, பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதளத்தின் தேசிய தலைவருமான திரு. நிதிஷ் குமாருக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான டிஜிட்டல் முயற்சியில், பொதுமக்களின் பங்கேற்பு அதிகரித்து வருவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் திரு. மிருதுஞ்சய் குமார் நாராயண் தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில், வரலாற்று சாதனையாக 91.83 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

<u>*பிரதமர் (16)*</u>

ஹோமியோபதி மருத்துவம் தனது ஆழமான, சமூகப் பிணைப்பு மற்றும் நீடித்த அணுகு முறைகள் மூலம், வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை அடைவதற்கான பாதையாக இருப்பதை திரு. ஜாதவ் எடுத்துரைத்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். ஆயுஷ் அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் எழுதிய கட்டுரை ஒன்றை தனது சமூக ஊடகப் பதிவில் பகிர்ந்து கொண்ட பிரதமர் திரு. மோடி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹோமியோபதி மருத்துவமுறை தனிநபர் நலன் காப்பதோடு, மலிவான விலையில், சுற்றுச் சூழலுக்கு உகந்த மற்றும் சமூக பழக்க வழக்கங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான நல்வாழ்வுக்குரிய மாதிரியை உருவாக்குவதற்கும், அதன் பங்களிப்பை மேம்படுத்துவது குறித்தும், சிந்திப்பதற்கான ஒரு தருணமாக உலக ஹோமியோபதி தினம் திகழ்கிறது என்று, ஆயுஷ்துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தமது கட்டுரையில் தெரிவித்திருந்தார்.

இந்த ஆண்டு உலக ஹோமியோபதி தினம் நிலையான ஆரோக்கியத்திற்கான ஹோமியோபதி என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுவதாக, திரு. ஜாதவ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

*<u>குடியரசுத் தலைவர் (9)</u>*

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, திரு. ஹரிவன்ஷை மாநிலங்களவை உறுப்பினராக பரிந்துரை செய்துள்ளார். மாநிலங்களவையின் முன்னாள் துணைத் தலைவரான திரு. ஹரிவன்ஷின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது. உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. ரஞ்சன் கோகோய் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட மாநிலங்களவை காலி இடத்திற்கு, திரு. ஹரிவன்ஷ் பரிந்துரைக்கப் பட்டுள்ளார். இது தொடர்பான அறிவிப்பை மத்திய உள்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ளது.

*<u>மோடி வாழ்த்து (19)</u>*

பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதளத்தின் தேசிய தலைவருமான திரு. நிதிஷ் குமார், மாநிலங்களவை உறுப்பினராக இன்று பதவி ஏற்றதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ள பிரதமர், திரு. நிதிஷ் குமார், நாட்டின் மிகவும் அனுபவம் வாய்ந்த தலைவர்களில் ஒருவர் என்றும், நல்லாட்சிக்கான அவரது அர்ப்பணிப்பு குறித்து, எல்லா இடங்களிலும்

பாராட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். திரு. நிதிஷ் குமாரின் நீண்டகால அரசியல் அனுபவம், நாடாளுமன்றத்தின் மாண்பை மேலும் உயர்த்தும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையின் முன்னாள் துணைத் தலைவரான திரு. ஹரிவன்ஷ், மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப்பட்டதற்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். திரு. ஹரிவன்ஷ், இதழியல் மற்றும் பொது வாழ்வில் விலைமதிப்பற்ற பங்களிப்புகளை ஆற்றிய உள்ளார் என்றும், தனது ஆழ்ந்த சிந்தனைகள் மற்றும் நுண்ணறிவின் மூலம், கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களவையின் நடவடிக்கைகளை திரு. ஹரிவன்ஷ் செழுமைப் படுத்தினார் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*__மோடி – சூரிய மின்சாரம் (13)__*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு சூரிய மின்சக்தி சேமிப்புத் திறன் குறித்த சாதனையை எடுத்துரைக்கும் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவின் கட்டுரையை சமூக ஊடகத்தில் பகிர்ந்துள்ளார். புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் எட்டப்பட்ட முக்கியமான மைல்கல் இது என்றும் பிரதமர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, 2025-26ஆம் நிதியாண்டில், இந்திய வரலாற்றில் முதன் முறையாக அதிகமான வருடாந்திர, சூரிய மின்சக்தியின் சேமிப்பு சுமார் 45 ஜிகா வாட் என்ற அளவை பதிவு செய்திருப்பதாக அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த சாதனை எரிசக்தி பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றில், இந்தியாவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

*ஹோமியோபதி தினம் (12)*

ஹோமியோபதி என்பது, வெறும் மாற்று மருத்துவம் மட்டுமல்ல, அது, கருணை மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலான ஒரு அறிவியல் என்று, ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் உள்ள விக்யான் பவனில் இன்று நடைபெற்ற உலக ஹோமியோபதி தின நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், மக்கள் ஹோமியோபதி அடிப்படையிலான சிகிச்சையை விரும்புவதால், அந்த மருத்துவம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவதாகத் தெரிவித்தார். இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பில் ஹோமியோபதி ஒரு நிலையான சுகாதார முறையாக தன்னை நிலைநிறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஹோமியோபதியின் நிறுவனரான டாக்டர் ஹானிமன், பிறந்த நாளை நினைவு கூறும் வகையில், உலக ஹோமியோபதி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

*மக்கள்தொகை கணக்கெடுப்பு -1 (5)*

2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டத்தில் இதுவரை 5 லட்சத்து 72 ஆயிரத்துக்கும மேற்பட்ட குடும்பங்கள், சுய கணக்கெடுப்பு வசதியை பயன்படுத்தி, தகவல்களை தந்துள்ளதாக, மத்திய மக்கள் தொகை கணக்கெடுப்புப் ஆணையர் திரு. மிருதுஞ்சய் குமார் நாராயண் தெரிவித்துள்ளார்.

*மக்கள்தொகை கணக்கெடுப்பு - 2 (11)*

(வாய்ஸ்)

மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டம் ஏப்ரல் 1ஆம் தேதி தொடங்கி, வரும் 15ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் சுய கணக்கெடுப்பு வசதியை மக்கள் பயன்படுத்தி இருப்பது, மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான டிஜிட்டல் முயற்சியில், பொதுமக்களின் பங்கேற்பு அதிகரித்து வருவதை பிரதிபலிப்பதாக திரு. மிருதுஞ்சய் குமார் நாராயண் தெரிவித்துள்ளார். கோவா, கர்நாடகா, மிசோரம், ஒடிஷா, சிக்கிம்,

அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் உள்ளிட்ட 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுய கணக்கெடுப்பு வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இதற்கிடையே, சாதிவாரி கணக்கெடுப்புப் பணிகளை மத்திய அரசு நிறுத்த வேண்டும் என உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

*புதுச்சேரி தேர்தல் -1 (8)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 30 தொகுதிகளுக்கும் நேற்று நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், மக்கள் ஆர்வமுடன் வாக்குச் சாவடிக்கு வந்து, வாக்களித்ததன் பயனாக இதுவரை இல்லாத அளவிற்கு 89.87 சதவிகித வாக்குகள் பதிவாகி இருப்பதாக, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், 12 ஆயிரத்து 936 பேர் தபால் மூலம் வாக்களித்து உள்ளதாகவும், இது 1.36 சதவிகிதம் என்றும் தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி தேர்தல் - 2 (17)*

(வாய்ஸ்)

தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ள அவர், தேர்தல் செயல் முறையில் கார்பன் தடத்தை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நல்ல பலனை அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை சிறப்பாகவும், நேர்மையாகவும், அமைதியாகவும் நடத்த, தேர்தல் துறை சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டதாகவும், இதில் அரசு அதிகாரிகள், அரசு ஊழியர்கள், மாணவ தன்னார்வலர்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களின் ஒத்துழைப்புக் காரணமாக, தேர்தல் அமைதியான

முறையில் சிறப்பாக நடைபெற்றதாக, தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஜவஹர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, மாவட்டத் தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வாக்குப் பதிவில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இயந்திரங்களும், வாக்குச் சாவடி முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு, வாக்கு எண்ணிக்கை மையங்களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அறைகளில், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்னிலையில் பூட்டி சீல் வைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி தேர்தல் - 3 (6)*

வாக்கு எண்ணிக்கை நாளான அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை, ஆயுதம் தாங்கிய மத்திய ஆயுதப்படையின் கண்காணிப்பின் கீழ், அந்தப்பகுதிகள் இருக்கும் என்று தெரிவித்துள்ளார். இந்த காலகட்டத்தில், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள், வாக்குப் பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள ஆய்வு மேற்கொள்ளலாம் என்றும் திரு. குலோத்துங்கன் குறிப்பிட்டுள்ளார்.

*காரைக்கால் ஜிப்மர் (8)*

புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு நாளை காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகைப் புரிந்து சிறப்பு சிகிச்சைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட உள்ளன. நாளை காலை 10 மணி முதல், நண்பகல் 12 மணி வரை நடைபெறும் இந்த சிறப்பு மருத்துவ முகாமில், நோய் எதிர்ப்பியல் மற்றும் எலும்பு சம்மந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று, காரைக்கால் மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

***ஜெய்சங்கர் (12)***

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இன்று, ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. தோஷிமிட்சு மொட்டேகியுடன் தொலைபேசியில் உரையாடினார். இது குறித்து சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தெரிவித்துள்ள டாக்டர் ஜெய்சங்கர் ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக நடைபெறும் சர்வதேச கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட, மேற்கு ஆசியாவின் தற்போதைய நிலவரம் குறித்து, இருவரும் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, மேற்காசிய நெருக்கடிக்கு மத்தியில், மொரீஷியசின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில், அந்நாட்டிற்கு எண்ணெய் மற்றும் எரிவாயு வழங்குவதற்கான ஒப்பந்தத்தை இந்தியா இறுதி செய்து வருவதாக, டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மொரீஷியசில் நடைபெறும், 9ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, டாக்டர் ஜெங்சங்கர் அந்நாட்டிற்கு சென்றுள்ளார்.

***பியூஷ் கோயல் (9)***

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறையினரின் பங்கு இன்றியமையாததாக உள்ளது என்று, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், தெரிவித்துள்ளார். கோயம்புத்தூரில் இன்று கோவை, திருப்பூர் மற்றும் மேற்கு மண்டல தொழில்துறையினருடன் கலந்துரையாடிய அமைச்சர், தொழில்துறை வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து கூறினார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ், உள்நாட்டு உற்பத்தி ஊக்குவிக்கப் படுவதாகவும், இளைஞர்கள் ஸ்டார்ட் அப் திட்டத்தின் கீழ், தொழில்முனைவோராக உருவாகி வருவதாகவும் கூறினார்.

***நிதின் கட்கரி (12)***

கட்டுமானத் துறையானது புத்தாக்க முயற்சி மற்றும் நவீன தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் துறையாக வளர்ந்து வருகிறது என்று, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்ற 17ஆவது கட்டுமானத் தொழில் மேம்பாட்டு கவுன்சிலின் விஸ்வகர்மா விருதுகள்-2026, விழாவில் உரையாற்றிய அவர், நாடு முழுவதும் கட்டுமானத்தின் தரத்தை மேம்படுத்துவதோடு, செலவுகளை குறைப்பதையும் அரசு நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது என்று தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் தூண்களாக விளங்கும் இந்திய கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்புத் துறையின் திறன்களை எடுத்துக் கூறிய அமைச்சர், குறைந்த செலவிலான தொழில்நுட்பங்களை கட்டுமானத் துறையில் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

***விக்ரம் மிஸ்ரி (8)***

மத்திய வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் திரு. மார்கோ ரூபியோவை இன்று, வாஷிங்டனில் சந்தித்துப் பேசினார். வர்த்தகம், அரிய தாதுப்பொருட்கள், பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் , இந்த பேச்சு வார்த்தையில் இடம் பெற்றதாக, இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு. ஜெர்ஜியோ கர் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அமெரிக்காவுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வெளிப்படுத்த இந்தியா ஆவலுடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

***கிரிக்கெட் (3)***

ஐபிஎல் 20-20 கிரிக்கெட் தொடரில், இன்றிரவு 7.30 மணிக்கு, குவஹாத்தியில் நடைபெறும் போட்டியில், ராஜஸ்தான் அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

***வானிலை (6)***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், அடுத்த 3 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனையொட்டிய மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.